

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 26-05-2025


# எத்தனை முறை கண்டனங்கள்?

அமலாக்கத்துறை மீது கடுமையான கண்டனங்களைப் பதிவு செய்துள்ளது உச்சநீதிமன்றம்!

தன்னிடம் இருக்கும் புலனாய்வு அமைப்புகள் மூலமாக தனது எதிரிகளை மிரட்டுவதும், பணிய வைப்பதும்தான் பா.ஜ.க.வின் பாணியாகும். அதனை பல்வேறு மாநிலங்களில் பயன்படுத்திய பா.ஜ.க. அரசு, இப்போது தமிழ்நாட்டில் தி.மு.க. அரசு மீது பயன் படுத்தி வருகிறது.

டாஸ்மாக் நிறுவனத்தில் சோதனை என்ற பெயரால் தி.மு.க. ஆட்சிக்கு களங்கம் ஏற்படுத்தும் செயலைச் செய்து வருகிறார்கள். இதற்கு அமலாக்கத்துறையைப் பயன் படுத்துகிறார்கள். டாஸ்மாக் நிறுவனம் மீதான வழக்கை விசாரிக்க அமலாக்கத்துறைக்கு உச்ச நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது. அப்போது, அமலாக் கத்துறையை கடுமையாகக் கண்டித்துள்ளார்கள் உச்சநீதிமன்ற நீதிபதிகள்.

உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய், அகஸ்டின் ஜார்ஜ் மசிஹ் அமர்வு முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்துள்ளது. **“அமலாக்கத்துறை அனைத்து வரம்புகளையும் மீறிச் செயல்படுகிறது. அமலாக்கத்துறை இயக்குநரகம் கூட்டாட்சிக் கோட்பாட்டை மொத்தமாக மீறிக் கொண்டிருக்கிறது. மாநில அரசு நடத்தும் டாஸ்மாக் நிறுவனத்தை அமலாக்கத்துறை எப்படி சோதனை செய்ய முடியும்? பண முறைகேடு மூலமாக வருவாய் ஈட்டினார்கள் என்றால் அதற்கான ஆதாரம் என்ன? நிதி சார்ந்த முறைகேடு எங்கு நடந்துள்ளது என்பதைக் கூற முடியுமா? டாஸ்மாக் ஊழியர்களின் செல்போன்களை குளோன் செய்துள்ளது அமலாக்கத்துறை. தனிநபர் தவறு செய்திருந்தால் அதற்காக ஒரு நிறுவனத்தின் மீது நடவடிக்கை எடுக்க முடியுமா?”** என்று சரமாரியாகக் கேள்வி எழுப்பிய நீதிபதிகள், அமலாக்கத்துறை விசாரணைக்கே தடை விதித்து இருக்கிறார்கள்.

அமலாக்கத்துறை இத்தகைய கண்டனத்தை எதிர்கொள்வது இது முதல் முறையல்ல. மணல் குவாரிகள் தொடர்பாகவும் இதே போல் ஒரு ரெய்டை நடத்தி மிரட்டினார்கள். மாவட்ட ஆட்சியர்களுக்கே சம்மன் செய்தார்கள். விசாரணைக்காக சென்றவர்களை காக்க வைத்தும், விசாரணை நடைபெறும் இடத்தை மாற்றியும் அலைக்கழித்தது அமலாக்கத்துறை. இது தொடர்பான வழக்கு விசாரணையின் போதும் அமலாக்கத்துறை அதிகாரிகள் உச்சநீதிமன்றத்தால் கண்டிக்கப் பட்டார்கள்.

**“மணல் குவாரி வழக்கில் மாவட்ட கலெக்டர்களிடம், அமலாக்கத் துறை தொடர்ந்து விசாரணை மேற்கொள்ளலாம். ஆனால், தேவையில்லாமல் மாவட்ட கலெக்டர்களை காக்க வைத்து துன்புறுத்தக் கூடாது. கலெக்டர்களுக்கு பல்வேறு பணிகள் உள்ளன”** என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் கண்டித்தார்கள்.

**“விசாரணையின்றி நீண்ட காலம் ஒருவரை அமலாக்கத்துறை சிறையில் வைக்கக் கூடாது. சட்டபூர்வமான ஜாமீன் உரிமையை மறுக்கக் கூடாது. விசாரணையின்றி நீண்ட காலம் ஒருவரை அமலாக்கத்துறை சிறையில் வைக்க முடியாது. குற்றப்பத்திரிக்கையை தாக்கல் செய்யாமல் ஒருவரை நீண்ட காலம் சிறையில் வைக்க முடியாது. ஜாமீனை தடுப்பதற்காக குற்றப்பத்திரிக்கையை தாக்கல் செய்யாமல் இருக்கக் கூடாது”** என்றும் உச்சநீதிமன்றம் ஏற்கனவே எச்சரித்துள்ளது. ஆனாலும் அமலாக்கத்துறை அடங்கவில்லை.

டெல்லியில் ஆம் ஆத்மி கட்சித் தலைவர் அரவிந்த் கெஜ்ரிவால், மணீஷ் சிசோடியா ஆகியோர் கைது செய்யப்பட்டார்கள். அவர்களுக்கு இடைக்கால பிணை கூடத் தரப்படவில்லை. உச்சநீதிமன்ற நீதிபதிகள் சஞ்சீவ் கண்ணா, எஸ்.வி.பாட்டியா அமர்வில் இவர்கள் வழக்கு விசாரணைக்கு வந்த போது, **‘இந்த வழக்குக்கு ஆதாரம் என்ன?’** என்று நீதிபதிகள் கேட்டார்கள்.

**“டெல்லி மதுபானக் கொள்கை விவகாரத்தில் லஞ்சம் கைமாறியதாகச் சொல்கிறீர்கள். யார் அதை வழங்கினார்கள்? சிசோடியா மீதான புகாருக்கு என்ன ஆதாரம் வைத்திருக்கிறீர்கள்? இவர் மீது எந்த அடிப்படையில் குற்றம் சாட்டுகிறீர்கள்? தினேஷ் அரோரா என்பவரின் வாக்கு மூலத்தை மட்டும் ஆதாரமாகக் காட்டுகிறீர்கள். வேறு என்ன ஆதாரம் வைத்திருக்கிறீர்கள்? சிலர் பேசிக் கொண்டதற்கு என்ன ஆதாரம் வைத்துள்ளீர்கள்? வாட்ஸ் அப் செய்திகளை ஆதாரமாகக் கொள்ள முடியுமா? ஒரு அப்ரூவர் அனுமானமாகச் சொல்வதை ஏற்றுக் கொள்ள முடியுமா? குறுக்கு விசாரணை நடக்கும் போது இந்த புகார்கள் எல்லாம் இரண்டு நிமிடம் கூட நிற்காது”** என்று நீதிபதிகள் சொன்னார்கள். அதன்பிறகும் அமலாக்கத்துறை தனது நடத்தையை மாற்றிக் கொள்ளவில்லை.

2023 ஆம் ஆண்டு ஒரு ரியல் எஸ்டேட் அதிபர் தொடர்புடைய வழக்கில் அவரை எதற்காகக் கைது செய்துள்ளோம் என்பதையே சொல்லவில்லை. அவர் மீதான குற்றத்தை ஒரு தாளில் எழுதி வாசித்திருக்கிறார்கள். அவர் உச்சநீதிமன்றம் சென்று பிணை வாங்கினார். அப்போதும் அமலாக்கத் துறையை உச்சநீதிமன்றம் கண்டித்தது.

**“பொருளாதாரக் குற்றங்களைத் தடுக்கும் கடுமையான பொறுப்பைக் கொண்ட முதன்மை விசாரணை நிறுவனமாக இருப்பதால் அமலாக்கத்துறையின் ஒவ்வொரு நடவடிக்கையும் வெளிப்படையாகவும் நியாயமாகவும் இருக்க வேண்டும்”** என்று நீதிபதிகள் சொன்னார்கள். ஆனால் அமலாக்கத்துறை அப்படி நடந்து கொள்ளவில்லை.

Don’t Create Atmosphere of Fear - என்பது அமலாக்கத் துறைக்கு முன்பு உச்சநீதிமன்றம் சொன்ன அறிவுரை ஆகும். அதாவது **‘அச்சம் நிறைந்த சூழ்நிலையை உருவாக்க வேண்டாம்’** என்பது ஆகும். ஆனால் அச்சத்தை உருவாக்கவே இதுபோன்ற அமைப்புகளை வைத்திருக்கிறார்கள்.

**அமலாக்கத்துறை, வருமானவரித்துறை ஆகிய அமைப்புகள் மூலமாக பா.ஜ.க. தனது அரசியல் எதிரிகளைப் பழிவாங்குவதற்கு நிரந்தர முற்றுப்புள்ளியை உச்சநீதிமன்றம் வைக்க வேண்டும்.**

## மேல்மலையனூரில் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்கள்! செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பெற்றார்!

செஞ்,சி மே 26–

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) நிகழ்ச்சி தொடங்கியது. மேல்மலையனூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வருவாய் தீர்வாய அலுவலரும் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் இரா. வளர்மதி தலைமை தாங்கி ஜமாபந்தி நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்.

வட்டாட்சியர் தலைட்சுமி அனைவரையும் வரவேற்றார். குடும்ப அட்டை, முதியோர் உதவித்தொகை, பட்டா மாற்றம் கேட்டு ஏராளமான பொதுமக்கள் கோரிக்கை மனு வழங்கினர்.

இதில் மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன், வட்டார கல்வி குழு தலைவர் நெடுஞ்செழியன், சமூக பாதுகாப்பு திட்ட தாசில்தார் வெங்கடேசன், ஜமாபந்தி மேலாளர் கார்த்திகேயன், தலைமையிடத்து துணை வட்டாட்சியர் ரவி, துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன், மாவட்ட கவுன்சிலர்கள் சாந்தி சுப்பரமணியன், செல்வி ராம சரவணன், ஒன்றிய கவுன்சிலர் யசோதரை சந்திரகுப்தன், மண்டல துணை வட்டாட்சியர் உமா மகேஸ்வரி, தேர்தல் பிரிவு துணை வட்டாட்சியர் நூர்ஜகான், வட்ட வழங்கல் அலுவலர் மெகருன்னிசா, வட்ட துணை ஆய்வாளர் சோபி, புள்ளியல் ஆய்வாளர் பிரகாஷ், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் கண்ணன், வருவாய் ஆய்வாளர்கள் விஜயகுமார், சசிகலா, கோவிந்தன், கிராம நிர்வாக அலுவலர் காளிதாஸ், மணிகண்டன், பாபா ஜான், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து நடைபெற்ற ஜமாபந்தி நிகழ்ச்சியில் அவலூர்பேட்டை குறு வட்டத்தைச் சேர்ந்த கிராமங்களில் இருந்து ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு கோரிக்கை மனு வழங்கினர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்தில் தி.மு.க. சொத்துப் பாதுகாப்பு வழக்கறிஞர் பிரிவுத் தலைவர் வெ.ரவியின் புதல்வரும், உச்சநீதின்ற வழக்கறிஞருமான ஆர்.குணாளன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

‘சிறுகதை மன்னன்’

## எஸ்.எஸ்.தென்னரசு இல்ல மணவிழா!

### அமைச்சர் பெருமக்கள் - கழக முன்னணியினர் வாழ்த்துகின்றனர்!

மதுரை, மே.26-

‘சிறுகதை மன்னன்’ எஸ்.எஸ்.தென்னரசு இல்ல மணவிழா மதுரையில் மே 28 அன்று நடைபெறுகிறது.

வெள்ளூர் - நினைவில் வாழும் எஸ்.சொக்கலிங்கம் - சி.ஆரியசுந்தரி ஆகியோரின் மகன் வழிப் பேத்தியும், மதுரை - நினைவில் வாழும் ‘சிறுகதை மன்னன்’ எஸ்.எஸ்.தென்னரசு - ஜாக்குலின் தென்னரசு ஆகியோரின் மகள்வழிப் பேத்தியும் பொறியாளர் சி.சோம சுந்தரம் - எஸ்.பாமினி நாச்சியார் ஆகியோரின் புதல்வியுமான, டாக்டர் எஸ்.ஆரிய சுந்தரி (எ) சிந்துவுக்கும், மதுரை - நினைவில் வாழும் எம்.தங்கவேல் - டி.முனியம்மாள் ஆகியோரின் மகன் வழிப் பேரனும், காளையார் கோவில் - நினைவில் வாழும் டி.ஆர்.சுப்பையா - சகாயவள்ளி ஆகியோரின் மகள் வழிப் பேரனும், டாக்டர் டி.மயில்வாகனன் (எ) மனோகர் - எம்.ராணி ஆகியோரின் புதல்வருமான பொறியாளர் எம்.மனோஜ்க்கும் மணவிழா 28.5.2025 - புதன்கிழமை காலை 6 மணியளவில் மதுரை, திருப்பாலை, விஜய மஹாலில் நடைபெறுகிறது.

இம்மணவிழா நிச்சயதார்த்த நிகழ்ச்சி 27.5.2025 செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணியளவில் நடைபெறுகிறது.

இம்மணவிழாவில் அமைச்சர் பெருமக்கள், கழக முன்னணியினர், மாநில மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் கழகச் செயல்வீரர்கள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.







முதலமைச்சர் அவர்கள் கடந்த 9.5.2025 அன்று திறந்து வைத்த திருச்சிராப்பள்ளி மாவட்டம் பஞ்சப்பூர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் மு.கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையத்தின் பல்வேறு பகுதிகளில் செய்யப்பட்டுள்ள சிறப்பு வசதிகள், முதல் தளத்தில் நகரப் பேருந்துகள் வந்து செல்ல செய்யப்பட்டுள்ள வசதிகள் ஆகியவற்றை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.5.2025) நேரில் பார்வையிட்டார். இந்நிகழ்வில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு. இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன். பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா. சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார் மாநகராட்சி ஆணையர் வே.சரவணன் உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்